RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| திரை : 02 | மொழி : 12 | ஜூலை - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 12 | July - 2025 | Page: 8 | Price: Rs. 10 |


# "ஆனந்த வாழ்க்கைப்படம்" உலகமெல்லாம் சென்றடைய வேண்டும்



## தமிழக செய்தித்துறை அமைச்சர் மாண்புமிகு மு.பெ.சாமிநாதன் உரை




ஆனந்த வாழ்க்கை என்ற ஆவணப் படத்தின் வெளியீட்டு விழா சென்ற மாதம், 14.06.2025 அன்று சென்னை சாலிகிராமத்தில் உள்ள பிரசாத் திரையரங்கில் திரையிடப்பட்டது. இந்த நிகழ்வில், மாண்புமிகு தமிழக செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், உலக சேவா சமுதாய சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ எஸ்.கே.எம்.மயிலானந்தன், துணைத் தலைவர்கள் சின்னசாமி, கே.ஆர். நாகராஜன், திரைப் பட இயக்குநர்கள் எஸ்.பி.முத்துராமன், கே.பாக்யராஜ், ஆர்.வி.உதயகுமார், சமுத்திரக்கனி, கதிர், எழில் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் மற்றும் தமிழக மெங்குமிருந்து மனவளக்கலை அறங் காவலர்களும், நீதிபதிகளும், ஆசிரியர் களும், அன்பர்களும், கலந்து கொண்டனர்.

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் ஆசியோடு, பத்மஸ்ரீ. திரு. SKM. மயிலானந்தன் வழிகாட்டுதலின் படி ஆழியாறு அறிவுத் திருக்கோயில் உடன் இணைந்து உலக சமுதாய சேவா சங்கம் தயாரித்திருக்கும் படம் 'ஆனந்த வாழ்க்கை'.

இத்திரைப்படத்தில், கே. பாக்யராஜ், மீரா கிருஷ்ணன், ஜீவா தங்கவேல், விட்டல் ராவ், குரு அரங்கதுரை, நிஷாந்த், ஜெயந்தி தியாகராஜன், சோபியா வேம்பு, வெடி கண்ணன், பிரியா, மாஸ்டர் ராமானுஜம் ஆகியோருடன் ஆழியாறு அறிவுத் திருக்கோயில் அன்பர்களும், ஆசிரியர்களும் நடித்திருக்கிறார்கள்.

இத்திரைப்படத்தை ஆர். சுப்ரமணிய பாரதி கதை, திரைக்கதை, வசனம் எழுதி, இயக்கி உள்ளார். இவர், தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கமும், பெங்களூரு இன்னோவேடிவ் பிலிம் அகாடமியும் (INNOVATIVE FILM ACADEMY) இணைந்து நடத்திய தேசிய அளவிலான குறும்பட போட்டியில் "பாஞ்சாலி" என்ற குறும் படத்திற்காக முதல் பரிசு வென்றவர். இவர் தற்பொழுது, தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தில் செயற்குழு உறுப்பினராக உள்ளார்.

> **தமிழகமெங்கும் உள்ள கிராமங்கள், பட்டிதொட்டி எங்கிலும் இந்த சினிமா வெளியிடப்படும். அதற்கான திட்டம் தீட்டி கொண்டிருக்கிறோம்**
> **- பத்மஸ்ரீ எஸ்.கே.எம்.மயிலானந்தன்**

பல்வேறு வெற்றி படங்களுக்கு இசையமைத்த சத்யா. C. இப்படத்திற்கு உணர்வு பூர்வமாக இசையமைத் திருக்கிறார். இந்த திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகத்தை ஆழியாறு அருள்நிதி CEO திரு. P.முருகானந்தம் மேற்கொண்டுள்ளார்.

**இந்த நிகழ்வில், மாண்புமிகு தமிழக செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பேசும்போது,**

"வணிக ரீதியில் இல்லாமல் சமூகத்திற்கான ஒரு படைப்பாக இந்த 'ஆனந்த வாழ்க்கை' படத்தை உருவாக்கி இருக்கிறார்கள். இது ஒரு நல்ல முயற்சி. எதிர்காலத்திலே உலகம் அமைதியாக

> பக்கம் 4ல் தொடரும்



டிஸ்கவரி புக் பேலஸ்


டிஸ்கவரி ஆர்ட் கேலரி

**டிஸ்கவரி புக் பேலஸ்**

1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,

சென்னை-78 | 9940446650

**திரையிடல், நூல் வெளியீட்டுக்கான**

**70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்**


பிரபஞ்சன் அரங்கம்


ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்



# ‘டிஸ்கவரி புக் பேலஸ்’-ன் புது முயற்சி ‘புக் புக்’







சென்னையில் இருந்து திருச்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் பயணிக்கும் பயணிகளிடையே 99km என்பது ஒரு குறிப்பிட்டத்தக்க லேண்ட் மார்க்காக மாறியுள்ளது. அந்த இடத்திற்கு கூடுதல் அழகு சேர்க்கும் விதமாக சென்னை 'டிஸ்கவரி புக் பேலஸ்' தனது 16 ஆண்டுகால புத்தகத் தொழில் அனுபவத்தைக் கொண்டு 'புக் புக்' என்ற கண்டெய்னர் மாடல் புத்தகக் கடையைத் திறந்துள்ளது. திறக்கப்பட்டு ஒரு மாதம் ஆகிய நிலையில் வாசகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதுகுறித்து மேலும் பல தகவல்களை அறிந்து கொள்ள டிஸ்கவரி புத்தக பேலஸின் உரிமையாளர் திரு. வேடியப்பன் அவர்களிடம் நம் திரைமொழி சார்பாக உரையாடிய பொழுது:

**இன்டர்நெட், சோசியல் மீடியா தாக்கம் அதிகமாகிவிட்ட இந்த சூழ்நிலையில் 'புக் புக்' கண்டெய்னர் மாடல் புத்தகக் கடை ஐடியா எப்படி உருவானது?**

தொழில்நுட்பம் நமது அன்றாட வாழ்க்கைக்கு மிகவும் அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் அபரிமிதமான வளர்ச்சியால் காலம் தொழில்நுட்பத்திற்கு அடிமையாகி விட்டது. அதேநேரத்தில் அதிலிருந்து மீண்டு வருவதற்கான வாய்ப்புகள் கண்ணுக்கெட்டிய தூரம்வரை காணவில்லை. இந்நிலையில் வாசிப்பு குறைந்துவருவது என்பது தனிமனிதப் பிரச்சினை இல்லை. அது ஒரு சமூகப் பிரச்சினையாக, நோயாக மாறிவரும் காலம் இது. அதனால் நோய்மையுற்ற சமூகத்திற்கு மருத்துவன் அவசியமாகிறான். ஒருவகையில் மருத்துவனைக் காட்டிலும் புத்தகமும் வாசிப்பும் மேலானது. ஏனென்றால் மருத்துவன் கூட நோயினை உடல்சார்ந்து அதன் உள்ளும் புறமும் மட்டுமே குணப்படுத்துவான். ஆனால் ஒரு வாசிப்பு மனிதனை அவனுக்கான பிரச்சினையின் உள் மற்றும் புறக்காரனிகளோடு சமூகக் கூறுகளையும் கண்டறிந்து



மாற்றி அமைக்கும் சிகிச்சையைச் செய்கிறது. அப்படிப்பார்த்தால் 'புக் புக்' என்ற இந்த திட்டம்கூட ஒரு மருத்துவம் போலதான். அதைவிடவும் மேலானது, அவசியமானது.

**இந்தக் கடையை திறந்து ஒரு மாதம் ஆகிவிட்ட நிலையில், வாசகர்களிடையே வரவேற்பு எப்படி இருக்கிறது? என்னென்ன மாதிரியான புத்தகங்கள்அதிகமாவிற்பனையாகிறது?**

நாம் எப்போதும் இதில் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வரமுடியாது. ஏனென்றால், நாம் எதை முன்னிறுத்துகிறோமோ அது விற்பனையாகும். அந்த வகையில் 'டிஸ்கவரி புக் பேலஸ்' எப்போதும் முன்னிலைப்படுத்தும், சங்க இலக்கியம் முதல் தீவிரமான சமகால படைப்பிலக்கிய நூல்களுடன் இவற்றுக்கு இணையாக குழந்தைகள் நூல்களை விற்பனைக்கு வைத்துள்ளோம். கூடவே ஆங்கில நூல்களும் இடம்பெற்றுள்ளன. அதனால் இவை சார்ந்த நூல்களே விற்பனையில் அதிகம் இடம்பிடிக்கிறது.

**தமிழ்நாட்டில் புத்தகச் சந்தையின் இன்றைய நிலைதான் என்ன?**

தமிழ்நாட்டில் ஒரு திரைப்படம் வெளியாகும்போது, 1000 திரையரங்குகளில், அதிகபட்சம் ஒரு நாளைக்கு 8000 காட்சிகள் வரை பார்க்கக் கூடிய அடிப்படைக் கட்டமைப்பு வலுவாக உள்ளது.

அத்தியாவசியமற்ற பொருட்கள் கூட சங்கிலித்தொடராக ஒரே மாதிரி, ஒரே தரத்தில் தமிழ்நாடு முழுக்கக் கிடைக்கிறது. எந்தவகைப் பொருளாக இருந்தாலும் அதை உற்பத்தி செய்யும் சிறு & பெரு நிறுவனங்கள் தங்களின் பொருள்களுக்கு லட்சக்கணக்கில் செலவழித்து அனைத்து ஊடகங்களிலும் விளம்பரம் செய்கிறது. ஆனால், ஒரு புதிய புத்தகம் வெளியாகும்போது, அந்தப் புத்தகம் அதே நாளில் & அதே நேரத்தில் ஒரு கடையில் கூட கிடைக்கும் நிலை தமிழ்நாட்டில் இல்லை. அதோடு, புத்தகங்களுக்கென்று விளம்பரம் செய்யும் நிலையும் இல்லவே இல்லை. 'புக் புக்' புத்தகக்கடை இந்த நிலையை மாற்றும்.

> **பொன்னாடைகளுக்குப் பதிலாக புத்தகங்களை பரிசளியுங்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்பு மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கி உள்ளது**

**இந்த 'புக் புக்' கண்டெய்னர் மாடல் புத்தகக் கடையோட நோக்கம் என்ன?**

முதன்மையான நோக்கம் புதிய வாசகர்களை தேடிச்சென்று அவர்களை வாசிப்புக்கு நெருக்கமாக்குவது. வாசிப்பைக் கூட்டுவது. பல ஆயிரம் ஆண்டு பாரம்பரியமிக்க ஒரு மொழியின் சமகாலச் செயல்பாடு மற்றும் பயன்பாடு என்ற வகையில் அதன் உடனடி அளவுகோள் என்பது நூல்கள் விற்பனையும் வாசிப்பும்தான்.

புத்தகத் தொழிலில் ஆர்வமுள்ளவர்களை ‘புக் புக்’ நிறுவனத்தில் முதலீட்டாளர்களாக இணைத்து, புத்தகக் கடை தொடங்குவதற்கான உரிமங்களை அளிப்பது. இதன்மூலம் தமிழ்நாடு முழுவதும், ஒரே தரத்தில் குறைந்தது 100 புத்தகக்கடைகளை, மக்கள் அதிகம் கூடும் இடங்களில் அமைத்து சங்கிலித் தொடர் கட்ட மைப்பை ஏற்படுத்துவது.

ஒரு புதிய புத்தகம் வெளியாகும்போது, பத்திரிக்கை, தொலைக்காட்சி, சமூக வலைதள விளம்பரங்கள் மூலம், முன்பதிவு செய்து வாசகர்களை 'புக் புக்' நோக்கி வரவழைத்து, விற்பனையைக் கூட்டுவது.

உள்ளூர் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புரவலர்கள், பள்ளி & கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே தொடர் உரையாடலை உருவாக்கும் மையமாக செயல்பட்டு வாசகர்களை வாசிப்புக்கு நெருக்கமாக்குதல். முக்கியமாக குழந்தைகளுடன் பெற்றோர்கள் புத்தகக்கடைக்கு வந்து நூல்களை வாங்குவதை ஓர் அனுபவமாக மாற்றுவது.

புதிய புத்தகம் வெளியாகும்போது, வாசகர்கள் வரிசையில் நின்று புத்தகம் வாங்கும் சூழலை உருவாக்குவது. அச்சுத்தொழில் நச்சுத்தொழில் என்ற பல ஆண்டுகளாக ஒரு மாயத்திரையிட்டு, பதிப்புத் தொழில் இன்றளவும் குடிசைத்தொழில் போலவே நடந்து வரும் சூழலில், பதிப்பு, விற்பனை, வாசிப்பு இம்மூன்றையும் ஒரு கொண்டாட்டமாக மாற்றுவது.





**'புக் புக்' கடையில் எவ்வளவு புத்தகங்கள் இருக்கிறது? இங்கு வைக்கப் படாத புத்தகங்களை வாசகர்கள் கேட்டால் அவர்களுக்கு நீங்கள் எப்படி கிடைக்க செய்வீர்கள்?**

இந்த கண்டெய்னர் மாடலில் புத்தகக் கடையை வடிவமைக்கும்போது அதிகபட்சம் ரூ.6 லட்சம் அளவுக்கு நூல்களை வைக்கலாம் என்று நாங்கள் திட்டமிட்டோம். பிறகு வடிவமைப்பு களை பல்வேறு வகையில் மாற்றி மாற்றி தற்போதுள்ள இறுதி வடிவத் திற்கு கொண்டு வந்துள்ளோம். தற்போது ரூ.12 லட்சம் அளவுக்கு இந்த சிறிய கண்டெய்னரில் நூல்களை வைக்க முடிகிறது என்பது எங்களுக்கே ஆச்சரியம். அதோடு கூடுதலாக எழுது பொருட்கள் மற்றும் சிறிய அளவிலான பரிசுப்பொருட்களும் இதில் கிடைக்கும். நாம் எவ்வளவு புத்தகங்களை வைத் திருந்தாலும் கிடைக்காத புத்தகங்கள் என்று எப்போதும் ஒரு பட்டியல் இருக்கும். அவற்றை முடிந்தளவு முதன்மை அலுவலகத்தில் இருந்து அஞ்சல் வழியாக வாசகர்களுக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டுள்ளோம்.

**இது புத்தகக் கடை பயணிகளுக்காக மட்டுமா? இல்லை. அந்த பகுதியில் வசிக்கிற வாசகர்களுக்கானதா? அந்தப் பகுதியில் உள்ள மக்கள், பள்ளிக்கூட மாணவர்கள் புத்தகக் கடையை பார்வையிட ஏதாவது முன்னெடுப்பு நடவடிக்கை இருக்கா?**

நாங்கள் கற்பனையாகவும், திட்டமாகவும் வரைந்து வைத்துள்ள ஒரு கண்டெய்னர் புத்தகக் கடை எப்படி இருக்கும் என்று கேட்பவர்களுக்கு காட்டும் ஒரு மாடல் கடைதான் இது. தற்போது சென்னை-திண்டிவனம் தேசிய நெடுஞ்சலையில், அச்சரப்பாக்கத் தில் உள்ள 99கிமீ காஃபி ஸ்டாப் வளாகத்தில், அதன் உரிமையாளர் திரு.மனோ சாலமன் அவர்களின் ஆதரவோடு திறக்கப்பட் டுள்ளது. முதல் கடையைப் பொறுத்தவரை சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு காரில் பயணிக்கும் பயணிகளையே முதன் மையாகக் கொண்டு தொடங்கப்பட் டுள்ளது. என்றாலும் செங்கல்பட்டு, மதுராந்தகம், மேல்மருவத்தூர் சுற்று வட்டார ஊர்களிலுள்ள வாசகர்கள் ஆர்வமுடன் வந்து நூல்களை வாங்கிப் போகிறார்கள். கல்லூரி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களும் வரத்தொடங்கி உள்ளனர்.

**இதுவரைக்கும் எழுத்தாளர்கள், வி.ஐ.பி.கள், யார் யாரெல்லாம் இந்த புத்தகக் கடையை வந்து பார்வை யிட்டாங்க... வாழ்த்து சொன்னாங்க?**

திறப்புவிழா கண்டு ஒருமாதமே ஆகி இருந்தாலும், வந்துபோன சிறப்பு விருந்தினர்கள் ஏராளம். முதல் நாளிலேயே கவிப்பேரரசு வைரமுத்து, முன்னாள் தலைமைச் செயலர் வெ. இறையன்பு, வெ.திருப்புகழ், நக்கீரன் கோபால், எழுத்தாளர் பவா செல்லத்துரை, திரைப்பட இயக்குநர்கள் சமுத்திரக்கனி, மு.களஞ்சியம், யுரேகா, எழுத்தாளர் இமயம், மூத்த பத்திரிக்கையாளர் பொன்சி, தன்னம்பிக்கை பேச்சாளர் ஈரோடு மகேஷ், கவிஞர் தாமரைபாரதி, மே17 இயக்கம் தோழர் திருமுருகன் காந்தி, முன்னாள் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் வைகைச் செல்வன் என ஒரு பெரும் பட்டியல் உள்ளது. வந்துபோகும் அனைவருக்குமே ஒரு வியப்பும், மகிழ்ச்சியும், இன்னும் சிறப்பாக வரவேண்டும் என்ற வாழ்த்தையும் சொல்கிறார்கள். புத்தகத்துறையில் இருந்து எல்லோரும் வெளியேறி வரும் சூழலில், ஒரு தொலைநோக்குப் பார்வையோடு, புதிய உற்சாகமாக 'புக் புக்' தொடங்கி இருப்பது அனைவரையும் பாராட்ட வைக்கிறது.

**இந்த 'புக் புக்' புத்தகக் கடையை வைக்க எந்த மாதிரியான இடங்களை தேர்வு செய்ய வேண்டும்?**

மூன்று வகையாக திட்டங்களை முன் வைக்கிறோம். முதலாவது ஒரு கண்டெய்னரில் 15 லட்சம் முதலீட்டில் தொடங்குவது. இதற்கு மக்கள் அதிகம் கூடும் பிரபலமான உணவங்கள், பெட்ரோல் நிலையங்கள், துணிக்கடைகள், பூங்காக்கள் என ஒரு பாதுகாப்பான இடங்களை தேர்வு செய்கிறோம். இங்கு தமிழ், ஆங்கிலம், குழந்தைகள் புத்தகங்கள் என ஒவ்வொன்றும் ஒரு அலமாரியில் இருக்கும். இரண்டாவது ஐந்து முதல் ஆறு கண்டெய்னர்களை வைத்து **'அறிவுப் பூங்கா'** அமைக்கிறோம். இதற்கு போக்குவரத்து வசதியுடன் கூடிய ஒரு நல்ல திறந்தவெளி இடம் மட்டும் அமைந்தாலே போதும். அந்த இடத்தையே மக்கள் கூடும் இடமாக மாற்றிவிடலாம். முதலாவது கடையில் தனித்தனி அலமாரிகளில் இருந்த நூல்கள் இங்கே சற்று விரிவாக தனித்தனி கண்டெய்னர்களில் இருக்கும். ஒன்றுடன் ஒன்று தொடர்பு செய்திருப்போம். அதோடு குழந்தைகள் விளையாட தனி இடமும், தேநீர் மற்றும் சிற்றுண்டிக் கடையும் இடம்பெறும். முழுக்க முழுக்க சூரிய ஒளியில் இயங்கும்படி அமைக் கப்பட்டிருக்கும். மூன்றாவது வகை என்பது கிட்டத்தட்ட முதல் வகைபோல தான். முழுக்க முழுக்க நூலகப் பயன்பாட்டிற்கு மட்டுமே இவை. பெரியப் பெரிய தொழிலதிபர்கள் மற்றும் பெரிய நிறுவனங்கள் தங்களின் மதிப்புக்கூட்டுவதற்காக இந்த நூலகங் களை அமைத்துக்கொள்ளலாம். இதில் முதல் இரண்டும் சேவையுடன் கூடிய வியாபாரம் சார்ந்தது என்றால், மூன்றாவது முழுக்க முழுக்க சேவை மட்டுமே. இதற்கான இடங்கள் என்பது பெரிய தொழில் நிறுவனங்களின் வாசல்கள் மற்றும் பொது இடங்களைத் தேர்வு செய்யலாம்.

**இதில் உங்களோடு ஆர்வமுள்ள முதலீட்டாளர்களுக்கு இணைந்து செயல்பட வாய்ப்பு உள்ளதா?, அப்படி என்றால் முதலீடு சார்ந்து என்ன வகையான உத்தரவாதம்?**

பொதுவாக புத்தகத் தொழில் என்பது பெரிய அளவில் போட்டிகள் நிறைந்தது இல்லை. போட்டி போட்டாலும் எளிதாக நமது செயல் பாடுகள் மூலம் நாம் தனித்து நிற்க முடியும். அதோடு வாசிப்பு என்பது ஒரு சமூகத்தின், மனித வளத்தின் ஆரோக்கி யத்திற்கான அடித்தளம். இது போன்ற புரிதல்களைக் கொண்டவர்கள் மட்டுமே இந்தத் தொழிலில் முதலீடு செய்ய இயலும்.

> **உள்ளூர் எழுத்தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புரவலர்கள், பள்ளி & கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் இடையே தொடர் உரையாடலை உருவாக்கும் மையமாக செயல்பட்டு வாசகர்களை வாசிப்புக்கு நெருக்கமாக்குவதே 'புக் புக்' நோக்கம்**

இது தொழிநுட்பக் காலம். இங்கே ஒரு வியாபாரத்தைச் சந்தைப்படுத்துதல் என்பது வட்டாரம், மாவட்டம், மாநிலம் என ஒரு நாடு சார்ந்ததல்ல. ஒரே முயற்சியில் அது உலகச் சந்தையை எட்டிப்பார்க்கிறது. சமூக வலைதளத்தில் ஒரு புத்தகத்தை விளம்பரம் செய்து விட்டால் அது உடனடியாக உலகத் தமிழர்களின் பார்வைக்குச் சென்று விடுகிறது. இந்நிலையில்தான் நாம் ஒரு திட்டத்தை உறுதியாக முன் வைக்கிறோம். அது கூடித் தொழில் செய்தல். 'டிஸ்கவரி புக் பேலஸ்' தாய் நிறுவனமாக இருந்தாலும், அதுவே தமிழ்நாடு முழுக்க நூறு 'புக் புக்' கடைகளைத் திறப்பது என்ற இலக்கை அடைவதோ, அதற்கான முதலீட்டை செய்வதோ முடியாது. ஆக முதலீட் டாளர்களை அழைக்கிறோம்.

**தமிழ்நாட்டில் வாசிப்பு சார்ந்த கட்டமைப்பு எப்படி இருக்கும்?**

ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களில் ஒன்றான 'அண்ணா நூற்றாண்டு நூலகம்' தமிழ்நாட்டில் உள்ளது. இங்கு 4000க்கும் மேற்பட்ட அரசு மற்றும் 1500க்கும் மேற்பட்ட தனியார் நூலகங்களும், 10,000 க்கும் மேற்பட்ட பள்ளிக் & கல்லூரி நூலகங்களும் உள்ளன.

1000க்கும் மேற்பட்ட பதிப்பகங் களின் பங்களிப்புடன், 48ஆவது ஆண்டாகத் தொடரும் 'சென்னை புத்தகத் திருவிழா, விற்பனை அளவில் தெற்காசியாவிலேயே பெரியது என்று மதிப்பிடப்படுகிறது. ஆண்டுதோறும் 150க்கும் மேற்பட்ட புத்தகக் காட்சிகள் அரசு & தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்றன.

உலகளவில் 10 கோடி தமிழர் களிடையே, ஆண்டுக்கு 350 கோடி அளவுக்கு தமிழ் நூல்கள் விற்கப் படுவதாக ஆய்வுகள் எடுத்துரைக் கின்றன. எனவே, தமிழ்ப் புத்தகங் களுக்கும், வாசகர்களுக்கும் இடையே பாலமாக விளங்கும் விற்பனையாளர் கள் தேவை அதிகரித்திருக்கிறது.

**அரசாங்கத்தின் உதவிகள் இதற்கு எப்படி இருக்கிறது?**

அரசு புதிய புதிய நூலகங்களை திறந்து உள்ளது. இன்னும் பல்வேறு நூலகங்களை திறக்கும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. எழுத்தாளர் களுக்கு வீடு கொடுப்பது எழுத்துலக வரலாற்றில் எப்போதும் மறக்க முடியாத ஒரு பணி. குறிப்பாக, பொன்னாடைகளுக்குப் பதிலாக புத்தகங்களை பரிசளியுங்கள் என்று தமிழ்நாடு முதலமைச்சரின் அறிவிப்பு மிகப்பெரிய தாக்கத்தை உருவாக்கி உள்ளது. அதனால், தற்போதைய அரசு வாசிப்புக்கு ஒரு உகந்த சூழலை உருவாக்கி வருகிறது எனலாம்.



பக்கம் 1 தொடர்ச்சி

இருக்க வேண்டும், அதே நேரத்தில் மனிதனும் நலமோடு வாழ வேண்டும் என்கிற நோக்கத்திலே இந்த படம் முழுக்க முழுக்க உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த 15 வருடங்களுக்கு முன் நான் அமைச்சராக இருந்த பொழுது ஒரு முறை அணைகளை ஆய்வு செய்வதற்காக நீர்வளத்துறை அமைச்சராக இருந்த துரைமுருகனுடன் சென்றபோது அறிவு திருக்கோயிலில் தங்கும் சூழல் ஏற்பட்டது. அப்போதுதான் முதன் முறையாக அங்கே சென்றேன். வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்வு அது. அப்போது வேதாத்திரி மகரிஷி முக்தி அடைந்திருந்த சூழ்நிலை. அந்த நிலையில் அதிகாலையில் அங்கே வேதாத்திரி மகரிஷிக்கு அஞ்சலி செலுத்தி விட்டு சிறிய யோகா பயிற்சி ஒன்றை செய்தபோது எனக்கு சுகர் இருப்பதாக கண்டுபிடித்துக்கூறி சிகிச்சை எடுக்க வலியுறுத்தினார் உலக சேவா சமுதாய சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ எஸ்.கே. எம். மயிலானந்தன்.

அந்த சமயத்தில் நெடுஞ்சாலைத் துறை சம்பந்தமாக நீண்ட தூர பயணங்கள் நான் மேற்கொண்டு வந்ததால், இப்படி களைப்பால் வந்த உடல் சோர்வு என்றுதான் நினைத்தேன். ஆனால், அதன்பிறகு தான் அது நீரிழிவு நோய் என தெரிய வந்தது. சென்னை வந்து பரிசோதித்தபோது அது அதிக அளவில் இருந்தது. அதன்பிறகு சிகிச்சை எடுத்துக்கொண்டேன். அன்று அவர் சொன்னதை நான் கவனிக்க வில்லை என்றால் அது வேறு விதமாக கூட மாறி இருக்கலாம். அந்த வகையில் அறிவு திருக்கோயில் என் வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

திரைப்படங்கள், நாடகங்கள் மூலமாக மக்களுக்கு நல்ல விஷயங்களைக் கொண்டு செல்ல வேண்டும் என பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோர் அன்று திரைப்படங்களுக்கு வசனங்களை எழுதினார்கள். மக்கள் திலகம் எம்.ஜி. ஆர். திரைப்படங்கள் மூலமாக தன் கருத்துக்களை மக்களிடம் கொண்டு சென்றார். அந்த வகையில் இந்த படம் தமிழர்கள் வாழும் இடமெல்லாம் செல்ல வேண்டும். மற்ற மொழிகளிலும் கூட இந்த படத்தை மொழிமாற்றம் செய்து வெளியிட வேண்டிய சூழல் ஏற்படும் என்று நிச்சயமாக நான் கூறுகிறேன். கடல் கடந்து வெளிநாடுகளுக்கும் கூட இந்த படம் செல்லும் என நம்புகிறேன்" என்று கூறினார்.

**இந்த நிகழ்வில் கலந்து கொண்டு வரவேற்புரை ஆற்றிய உலக சமுதாய சேவா சங்க துணைத் தலைவர் ராம்ராஜ் காட்டன்ஸ் திரு. நாகராஜ்:**

மகரிஷி அய்யாவின் தத்துவம், கருத்து எல்லாம் மிக நன்றாக இருக்கிறது. ஆனாலும், மார்க்கெட்டிங் ரொம்ப வீக்காக உள்ளது என்று நாங்கள் அடிக்கடி பேசிக் கொள்வோம். அதை வெளிப்படுத்துவதற்காகவே இந்த ஆனந்த வாழ்க்கை படத்தை எடுத்தோம்.



அது இந்த அளவிற்கு சிறப்பாக இருக்கும் என நாங்களே எதிர்பார்க்கவில்லை. மிகவும் அற்புதமாக இருக்கிறது. எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.

இந்த காலத்தில் இருக்கும் மக்கள் பொருளுக்கு கொடுக்கும் முக்கியத் துவத்தை கூட மனித உடலுக்கு, ஆரோக்கியத்திற்கு, உறவுகளுக்கு மனதுக்கு கொடுப்பதில்லை. அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்பதற்காகவே மகரிஷி மனவளக்கலையை கொடுத்திருக்கிறார். நரகம் சொர்க்கம் என்று சொல்வார்கள். நாம் பிறந்த இந்த பூமி தான் நமக்கு சொர்க்கம். இதை நரகமாக மாற்றுவதும் சொர்க்க மாக மாற்றுவதும் நம் கையில் தான் உள்ளது. இந்த பூமியை சொர்க்கமாக மாற்றக்கூடிய மனவளக்கலை என்ற பொக்கிஷத்தை மகரிஷி நமக்கு தந்துள்ளார். இது ஊடகங்கள் மூலம் அனைத்து தரப்பு மக்களுக்கும் சென்றடைய வேண்டும் என்று பேசினார்.

**உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ எஸ்.கே.எம் மயிலானந்தன்:**

"இந்த படத்தை கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கி உள்ள சுப்ரமணிய பாரதி மனவளக் கலை பயிற்சி எடுத்தவர். அதனால், இந்த படத்தை சிறப்பாக இயக்கி இருக்கிறார். இசையமைப்பாளர் சத்யாவும் 'உலக நல வாழ்க்கை'யில் இருந்து எல்லா பாடல்களையும் அவர்தான் இசையமைத்து இருக்கிறார். நடிகர் பாக்யராஜ் உள்ளிட்ட கலைஞர்களும் மிகச் சிறப்பாக நடித்து இருக்கிறார்கள். சுவாமிஜியின் மறைவிற்குப் பிறகு சுமார் 300 மடங்கிற்கு மேல் நம் சங்கம் வளர்ந் திருக்கிறது. எங்களது கணக்குப்படி சுவாமிஜியின் மறைவுக்கு பிறகு 49 லட்சம் பேருக்கு மேல் இந்த மனவளக் கலை பயிற்சியை கற்றுக் கொடுத்திருக் கிறோம். எங்களது CEO முருகானந்தம் தலைமையில் இதுவரை 350 கிராமங்களை தத்தெடுத்து லட்சக் கணக்கான ஏழை மக்களுக்கு இலவச மாக இந்த பயிற்சியை கொடுத்து இருக்கிறோம். இந்த நிலையில் இந்த சினிமாவை கிராமத்தில் திரையிட்டால் இன்னும் நல்ல வளர்ச்சி கிடைக்கும் என்று நம்பிக்கை எனக்கு இருக்கிறது. முதற்கட்டமாக இந்த முயற்சியை எடுத்திருக்கிறோம். தமிழகமெங்கும் உள்ள கிராமங்கள், பட்டிதொட்டி எங்கிலும் இந்த சினிமா வெளியிடப் படும். அதற்கான திட்டம் தீட்டி கொண்டிருக்கிறோம்.

இந்த மனவளக்கலை பயிற்சியை மக்கள் அனைவருக்கும் கொண்டு செல்ல 17 மண்டலங்களாக பிரித்து அலுவலகங்களை நிர்மாணித்து செயல்பட்டு வருகிறோம். அந்த



வகையில் இந்த திரைப்படமும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் என கருதுகிறேன். மக்களுடைய மனம் பண்பட்டால் குடும்பத்தில் அமைதி, அன்பு ஏற்படும். மனதிலே உயர்ந்த பண்புகளைக் கொண்டு வருவது என்பது வாழ்நாள் பயிற்சி. கெட்டவனாக இருந்தாலும் கூட அவனைக் கெட்ட விதமாக பேசுவது பாவம். இந்த மாதிரி நற்பண்புகளை அடைய குழந்தைகளிலிருந்து பயிற்சி கொடுக்க வேண்டும். தமிழக அரசின் அனுமதி பெற்று இதுவரை 10 லட்சம் குழந்தைகளுக்கு இலவசமாக இந்த பயிற்சியை கொடுத்திருக்கிறோம். அறிவில் சிறந்த குழந்தைகளோடு பண்புள்ள குழந்தைகளையும் நாம் உருவாக்க முடியும். அதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும்" என்று கூறினார்.

**இயக்குநர் கே.பாக்யராஜ்:**

"சொர்க்கம், நரகம் இரண்டும் இங்கே நம்மிடையே தான் இருக்கிறது. இரண்டிற்கும் வாசல் ஒன்றுதான். அது நம் வாய்தான். அதிலிருந்து வரும் வார்த்தைகளைப் பொறுத்துதான் சொர்க்கம், நரகம் இருக்கிறது. அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியின் மனவளக்கலை பயிற்சி என்பது அடுத்தவர்களுக்கு, உதவி செய்து வாழாவிட்டாலும் கூட தனக்கான வாழ்க்கையை சிறப்பாக வாழும் முறைய சொல்லித் தருகிறது. மனவளக்கலையை கற்றுக் கொண்டால் நம் உடல் சுத்தமாக இருக்கும். ஆரோக்கியமாக இருக்கும். நாம் சீராகி விட்டாலே நம்மை சுற்றி இருப்பவர்களையும் சீர்படுத்த முடியும்.

இந்த படத்தில் நடிக்க இயக்குநர் என்னிடம் கதை சொன்னபோது, முதலில் மனவளக்கலை பற்றி நன்கு தெரிந்து கொண்டு, பிறகு நடித்தால் தான் சிறப்பாக இருக்கும் என்று கூறினேன். அதன் பிறகு இந்த அமைப்பை சேர்ந்தவர்கள் எனக்கும் என் மனைவி பூர்ணிமாவிற்கும் சில நாட்கள் இதற்கான பயிற்சியை அளித்தனர். அதை ஓரளவாவது கற்றுக் கொண்ட பின் தான் இந்த படத்தில் நடித்தேன். இந்தப்படத்தின் மூலம் ஐயா வேதாத்திரி மகரிஷி அவர்களின் அன்பர்களே சினிமாவிற்கு வந்து எங்களை போல நடிகர்களாகி விட்டார்கள் என்பதே எங்களுக்கு சந்தோஷம் தான்.

இதன் பயன் எல்லா இடத்திற்கும் சென்று சேர வேண்டும் என்பதுதான் இந்த படத்தை அவர்கள் எடுத்ததன் நோக்கமாக இருந்தது. இந்த படத்தைப் பார்த்துவிட்டு ஒரு கிராமத்தை தத்து எடுக்கிறார்களோ இல்லையோ, தங்களை சுற்றி உள்ளவர்களில் ஒரு சிலரையாவது ஒருவருக்கொருவர் கவனித்துக் கொண்டால் அதுவே ஒரு நல்ல மாற்றம்



தான். இந்த படம் பார்க்கும்போது அந்த உணர்வு நிச்சயம் ஏற்படும். இந்த படத்தில் நடித்ததை பெருமையாக நினைக்கிறேன். உலகம் எங்கும் இருக்கும் தமிழர்கள் மட்டுமல்ல, அனைத்து மனிதர்களும் இந்த படத்தை பார்த்தார்கள் என்றால் அவர்களுக்கு பயன் கிடைக்கும். இந்த வகையில் இந்த மனவளக்கலை பயிற்சியின் நன்மைகள் அனைவருக்கும் சென்று சேர வேண்டும்" என்று கூறினார்.



**இயக்குநர் எழில்:**

"எனக்கும் ஆழியாறு மனவளக் கலை பயிற்சிக்கு சென்று வந்த பிறகு நிறைய மாற்றங்கள் ஏற்பட்டது. இயக்குநர் இந்த படத்தில் சொல்ல வந்த விஷயத்தை அடித்தட்டு மக்கள் வரை சென்று சேரும் விதமாக மிக நேர்த்தியாக செய்திருக்கிறார். 2011 காலகட்டத்தில் கொஞ்சம் மன அழுத்தத்தில் இருந்தேன். அப்போது ஒரு நாள் குரு அரங்கதுரை என்னை அடையாறில் உள்ள மனவளக்கலை மன்றத்திற்கு அழைத்துச் சென்று ஒரு வார பயிற்சி வகுப்பில் சேர்த்து விட்டார். அங்கே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் ஆகியோரும் வந்திருந்தனர். இந்த ஒரு வார பயிற்சி வகுப்பில் எனக்கு மன அமைதி கிடைக்க ஆரம்பித்தது. அப்போதிருந்து மெடிடேசனை தொடர்ந்து செய்து வருகிறேன். சில நேரங்களில் நம்மை அறியாமல் ஏற்படும் சிறு கோபம் கூட நமது வளர்ச்சி, குணாதிசயங்களை கெடுத்து விடும். அதை இந்த பயிற்சி கட்டுப்படுத்துகிறது. அப்படி 2011ல் இந்த மனவளக்கலை மையத்தில் பயிற்சி எடுத்துக் கொண்டு, அதன் பின்னர் தான் 2012ல் மனங்கொத்தி பறவை படத்தைத் துவக்கினேன். என்னுடைய வளர்ச்சிக்கு அது ரொம்பவே உதவிகரமாக இருந்தது. இது ஒரு அற்புதமான விஷயம். எல்லோருக்கும் சென்று சேர வேண்டும்" என்று கூறினார்.

**இயக்குநர், ஆர்.வி. உதயகுமார்:**

**தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத் தலைவர்.**

"இந்த படத்தின் இயக்குநர் சுப்பிரமணிய பாரதி என்னுடைய ஆருயிர் தம்பி. அவர் இயக்கிய குறும்படத்தை எங்கள் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கம்தான்



தயாரித்தது; விருது கொடுத்தது. அவருக்கு இப்படி ஒரு படத்தை இயக்கும் பாக்கியம் கிடைத்திருக்கிறது. நான் எடுத்த 17 படங்களில் 13 படங்கள் ஆழியாறு பகுதியில் தான் எடுத்திருக்கிறேன். அந்த மனவளக்கலை கட்டிடத்தையும் பார்த்திருக்கிறேன். ஆனால் ஒரு முறை கூட உள்ளே சென்றது இல்லை. ஆனாலும் அந்த கட்டிடத்தை பார்த்ததாலேயே இன்றும் ஒழுக்கமான ஒரு மனிதனாக வாழ்ந்து கொண்டிருக்கிறேன். ஆசிரமத்தில் எல்லாவித அனுக்கிரகங்களும் அங்கே போகாமலேயே என்னை வந்து அடைந்ததாக கருதுகிறேன். ஒழுக்க மானவனாய் இருப்பதே ஒரு தியானம் தான். அது ரொம்ப சிரமம். ஒரு வழிகாட்டுதல் இருந்தால் கொஞ்சம் சுலபம்.

சினிமாவில் இயக்குநர்கள் மட்டும்தான் நரம்புகளிலும் வேலை செய்பவர்கள். அதில் ஒரு பிரச்சனை வரும் போது தான் தாங்கள் என்னென்ன விஷயங்களைசெய்ய தவறி இருக்கிறோம் எனதெரிய வரும். இந்த பிரச்சனைகளுக்கு வேதாத்திரி மகரிஷி ஐயாவிடம் வழி இருக்கிறது. எஸ்பி முத்துராமன் சாருக்கு இதுபோன்று பிரச்சனை வந்த பிறகுதான் அவரே அங்கே சென்று இருக்கிறார். என்னை போன்றவர்களுக்கே இப்படி ஒரு விஷயம் இருக்கிறது என்பது நீண்ட நாள் கழித்துதான் தெரிகிறது. இந்த மனவளக்கலை பயிற்சியை இயக்குநர்கள் எஸ்.பி. முத்துராமன், எழில், கதிர் போன்றவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்று இன்றுதான் தெரிந்து கொண்டேன். அந்த வகையில் இந்த படத்தை இயக்குநர் சங்கத்திற்கே ஒரு முறை திரையிட்டு காட்டி விட்டால் மிக சரியாக இருக்கும்" என்று கூறினார்.



**இயக்குநர் கதிர்:**

வேதாத்திரி மகரிஷி சொல்லிய முக்கியமான ஒன்று வாழ்க்கையில் நன்றி உணர்வு என்பது வேண்டும். அந்த வகையில் இங்கே அமர்ந்திருக்கும் இயக்குநர் கே. பாக்கியராஜ் எனது திரையுலக பயணத்தில் அடித்தளம் போட்டு கொடுத்தவர். எனது மானசீக குரு. அவருக்கு என் நன்றி. கவிஞர் வாலி என்னிடம் சொல்வார் நான் எப்போது எம்.எஸ்.விஸ்வநாதனை சந்தித்தேனோ அப்போதே என் வாழ்க்கையில் வறுமை காணாமல் போனது என்பார். அதேபோல நான் வேதாத்திரி மகரிஷியை என்று கைப்பிடித்தேனோ அப்போது முதல் என் வாழ்க்கையில் துன்பம் போய்விட்டது.

நல்ல படங்களை இயக்கி பணமும், புகழும் சம்பாதித்தாலும் ஒரு கட்டத்தில், படங்களை தயாரித்து வெளியிட்டு நஷ்டத்தை சந்தித்தேன். அதன் பிறகு பல்வேறு பிரச்சனைகள் தானாகவே தேடி வந்தது. அந்த சமயத்தில் நடிகர் ராஜேஷை சந்திக்க சென்ற சமயத்தில்தான் வேதாத்திரி மகரிஷியின் மனவள கலை பயிற்சி பற்றி தெரியவந்தது. அதன் பிறகு முறையாக பயிற்சி எடுத்துக் கொண்டேன். என் மனைவிக்கும் அதை கற்றுக் கொடுத்தேன். சமீபத்தில் தான் ஆழியாறு சென்று பிரம்ம ஞானம் கற்று முடித்தேன். முன்பெல்லாம் துன்பம் என்றால் அதை எதிர் கொள்ள முடியாமல் தவித்தேன். இப்போது துன்பம் என்றாலே வேதாத்திரி மகரிஷியின் முகம் நினைவில் வந்து விடுகிறது. அது ஒரு எண்ணம் தானே என தெளிவாக கடந்து செல்ல முடிகிறது. உன்னை அறியாத வரை உண்மையான சந்தோசத்தை உன்னால் உணர முடியாது, உண்மையான சந்தோசம் என்ன என்பது நீ யார் என்பதை தெரிந்து கொள்வது தான் என வேதாத்திரி மகரிஷி கூறியதை நான் உணர்ந்து கொண்டேன். இந்த மனவளக்கலையை வெகு ஜன மக்களும் புரிந்து கொள்ளும் விதமாக ஆனந்த வாழ்க்கை என்ற படத்தை சுப்பிரமணிய பாரதி அற்புதமான இயக்கியுள்ளார்" என்று கூறினார்.



**இயக்குநர் சமுத்திரக்கனி:**

"இந்த மாதிரி ஒரு படத்திற்குள் இருப்பதற்கு ஏதோ ஒரு அருள் கிடைக்க வேண்டும். இந்த படத்தில் நடித்து இருப்பவர்களுக்கு அது கிடைத் திருக்கிறது. கடந்த சில வருடங்களுக்கு முன்பு நான் பொள்ளாச்சி படப்பிடிப்பில் இருந்தபோது திடீரென ஒரு நாள் ஆழியாறுக்கு வர சொன்னார்கள். அப்போது மகரிஷி அய்யாவின் வாழ்க்கையை படமாக பண்ண வேண்டும் என சொன்னார்கள். அவருடைய வாழ்க்கை வரலாற்றை முழுவதும் படிக்க வேண்டும் என்று சொல்லி படித்தேன். மிக பிரமிப்பாக இருந்தது. ஆனால், சில காரணங்களால் அதை முன்னெடுக்க முடியாமல் போய்விட்டது. அனேகமாக அதையும் சுப்ரமணிய பாரதிதான் இயக்குவார் என நினைக்கிறேன்.

பொதுவாக நான் ஒரே சமயத்தில் நான்கைந்து வேலைகளை பார்ப்பேன். எல்லாமே சரியாக நடக்கும். ஆனால் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு இதே போல அப்படி பார்க்கும் போது எல்லாமே தப்பு தப்பாக நடந்தது. ஒரே குழப்பமாக இருந்தது. அப்போதுதான் எடிட்டர் லெனினை சந்தித்தபோது அவர்தான் இந்த மனவளக்கலை வகுப்பில் சேர்த்துவிட்டார். ஏழு நாள் பயிற்சியில் அவரும் என்னுடன் இருந்தார். அதன் பிறகு பிரச்சனைகள் நீங்கி பழையபடி மாறினேன். இந்த நிகழ்ச்சிக்கான அழைப்புகள் வந்த போது கூட வேறு எங்கோ இருந்தேன். ஆனால் இந்த நிகழ்ச்சிக்கு செல்ல வேண்டும் என்கிற எண்ணம் என்னை இங்கே அழைத்து வந்துவிட்டது.

இந்த மனவளக்கலை பற்றி எல்லோரிடமும் கொண்டு செல்லுங்கள் என்று சொல்கிறார்கள். நாம் கொண்டு செல்ல தேவையில்லை. அதுவே தானாக எல்லாவற்றையும் இழுத்துக்கொள்ளும். அதற்கு தகுதியானவர்கள் தானாக வந்து சேர்ந்து விடுவார்கள். அவ்வளவு பெரிய சக்தி அது. நாமாக எல்லாம் தூக்கிக் கொண்டு நடக்க முடியாது. அடுத்த தலைமுறை நன்றாக இருக்க வேண்டும் என நினைத்து ஒரு விஷயம் செய்திருக்கிறோம். இந்த சமுதாயத்திற் கும் அடுத்த தலைமுறைக்கும் இது ஒரு அருட்கொடையாக இருக்கும் என நிச்சயம் நம்புகிறேன். நீ நல்லது செய்ய வேண்டாம், நல்லது செய்ய வேண்டும் என நினை அது போதும் அதுவே நம்மை சரியாக்கும் என்று என் குருநாதர் சொல்வார். காசு, பணம் யாரையும் காப்பாற்றாது. இது போன்ற ஒரு சக்தி தான் காப்பாற்றும். இதை இறுக்கி பிடித்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார்.



**இயக்குநர் எஸ்.பி. முத்துராமன்:**

"நான் 30 வருடங்களுக்கு முன்பு வேதாத்திரி மகரிஷி அய்யாவுடன் பேசிக் கொண்டிருக்கும் போது, "நான் அனுவிஷம் என்கிற நாடகத்தை எழுதி இருக்கிறேன். இதை நாடகமாக நடத்த முடியுமா?" என்று கேட்டார். சென்னைக்கு வந்து நடிகர் பூர்ணம் விஸ்வநாதன் நாடகக் குழுவுடன் இணைந்து மகரிஷி ஐயாவின் பிறந்த நாள் அன்று ஆழியாறிலே அவர் முன்னாலேயே அதை நாடகமாக நடத்தினோம். என்னுடைய பிறந்தநாளின் பெரும்பகுதி நான் ஆழியாறில் தான் இருப்பேன். அப்படி இல்லை என்றால் திருவொற்றியூரில் இருப்பேன்.

ஒருமுறை நான் திருவான்மியூரில் இருக்கும் பொழுது என்னை ரஜினிகாந்த் தேடி சந்திக்க வந்து விட்டார். அப்போது அவர் என்னிடம் பேசும்போது இங்கே ஒரு அலை வீசுகிறது. நான் இங்கு உங்களை பார்க்க வந்தேன். ஆனால் அவரை (வேதாத்திரி மகரிஷி) பார்த்தபோது என் மனதில் உள்ள குழப்பம் எல்லாம் நீங்கியது என்று சொன்னார். அவரை ஆழியாறுக்கு வாருங்கள் என அழைத்துக் கொண்டுதான் இருக்கிறேன். அவர் மனைவி லதா வந்து விட்டார். தானும் வருவதாக ரஜினிகாந்த் உறுதி அளித்திருக்கிறார். நிச்சயமாக அவரையும் ஒரு நாளைக்கு அங்கே அழைத்து வருவேன்.

பாக்யராஜை பொறுத்தவரை காமெடியாக நடிப்பார். ஆனால் இந்த படத்தில் அய்யாவின் மறு உருவமாக தத்துவத்தை பேசியிருக்கிறார். நான் வேதாந்த மகரிஷி அய்யாவை பற்றி சினிமா எடுக்க ஆசைப்பட்டேன். சிவாஜியை வைத்து மூன்று படம், உலகநாயகன் கமலை வைத்து 10 படம், சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வைத்து 25 படங்களை இயக்கி இருக்கிறேன். மகரிஷி அய்யாவை பற்றி படம் இயக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் இந்த சுப்ரமணிய பாரதி ஜெயித்து விட்டார். வேறு யார் மீதும் நான் பொறாமைப்பட மாட்டேன். ஆனால் இப்போது இவர் மீது பொறாமைப்படுகிறேன்.

இந்த படத்தின் டைட்டிலுக்கு ஏற்ப இன்று நான் ஆனந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறேன். உடற்பயிற்சி, உணவு பயிற்சி, மனவளக்கலை பயிற்சி, தியானம் இந்த நான்கையும் செய்தால் அய்யா சொன்ன அத்தனையும் உங்கள் வாழ்க்கையில் கிடைக்கும். சினிமா என்கிற என் லட்சிய கனவு நிறை வேறியது. மனைவி, குழந்தைகளை சரியாக கவனித்ததில்லை. ஆனால் என் மனைவி, என் குடும்பத்தை அழகாக கவனித்துக் கொண்டார். அய்யாவின் அமைப்பில் தான் மனைவிக்கு நன்றி சொல்வதற்கான ஒரு விழா நடத்துவதை பார்க்க முடியும். நானும் அதில் கலந்து கொண்டிருக்கிறேன்.

பாண்டியன் படப்பிடிப்பில் இருந்தபோது என் மனைவி மாரடைப்பால் இறந்து விட்டார் என

**திரை மொழி**

| | |
|---|---|
| நிறுவனர்/ஆசிரியர் | : R. சுப்ரமணிய பாரதி |
| பொறுப்பு ஆசிரியர் | : N. மூர்த்தி |
| சிறப்பாசிரியர் | : M. வேடியப்பன், |
| கௌரவ ஆசிரியர்கள் | : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார் |
| உதவி ஆசிரியர்கள் | : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார் |
| தலைமை நிருபர் | : பாலமுரளிவர்மன் |
| நிருபர் | : தங்கமித்ரன் |

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

தகவல் வந்தது. அவர் தானாக இறக்கவில்லை. என்னுடைய வேலைப்பளுவையும் அவர் மீது சுமத்தி நான் தான் அவரை கொன்று விட்டேனோ என்கிற குற்ற உணர்ச்சி மனதில் இருந்தது. அந்த சமயத்தில் தான் என் பிள்ளைகள் பொள்ளாச்சி ஆழியாறு பகுதிக்கு சென்று வாருங்கள், மன அமைதி கிடைக்கும் என்றார்கள். அப்போதுதான் அங்கே அறிவு திருக்கோயிலை பார்க்கும் வாய்ப்பு வேதாத்திரி மகரிஷி பற்றி கேள்விப்படும் வாய்ப்பு கிடைத்தது. மகரிஷி அய்யாவின் கையாலேயே பயிற்சி பெற்று பாடம் கற்று அவரே எனக்கு குருவாக அமைந்த பாக்கியமும் கிடைத்தது" என்று கூறினார்.



**இசையமைப்பாளர் சி. சத்யா:**

2009ல் தான் நான் மனவளக்கலை பயிற்சி வகுப்புக்கு சென்றேன். அதற்கு முன்னதாக நிறைய மனப் போராட்டங்கள் இருந்தது. அப்போது சீரியல்களில் இசையமைத்துக் கொண்டிருந்தேன். சில படங்களுக்கு ஒப்பந்தம் ஆனேன். ஆனால் எதுவுமே முன்னோக்கி நகராமல் நின்று விடும். பெரிய குழப்பமாக இருக்கும். அப்போது வடலூர் வள்ளலார் ஆசிரமத்திற்கு சென்று வருவதை வழக்கமாக வைத்திருந்தேன். அப்போது ஒரு நண்பர் நீங்கள் அறிவு திருக்கோயில் சென்று வந்தால் உங்களுக்கு இருக்கும் குழப்பங்களுக்கெல்லாம் விடை கிடைக்கும், ஒரு தெளிவு கிடைக்கும் என்று கூறினார்.

அப்போது இசையமைப்பாளர் சிற்பியிடம் உதவியாளராக பணியாற்றி வந்தேன். அவரிடம் இது பற்றி சொல்லும்போது நாம் இருவருமே சென்று வரலாம் என்று கூற ஆழியாறு சென்று வந்தோம். பல்வேறு விதமாக பயிற்சிகள் கிடைத்தன. அந்த அனுபவங்களுடன் மெடிடேஷன், உடற்பயிற்சி எல்லாம் செய்யும்போது ஒரு தெளிவு கிடைத்தது. அந்த ஒரு மாதத்திலேயே என்னுள் பெரிய அளவில் மாற்றம் தெரிந்தது. அதன் பிறகு தான் எனக்கு எங்கேயும் எப்போதும் என்கிற படத்திற்கு இசையமைக்கும் வாய்ப்பு கிடைத்தது. வேதாத்திரி மகரிஷி ஐயாவை பற்றி நிறைய பாடல்கள் பண்ணி யிருக்கிறேன். அதெல்லாம் எனக்கு மிகப்பெரிய பாக்கியம். ஆனால், அவருடைய கொள்கைகள் ஒரு படமாக, என்னுடைய இசையில் வருகிறது என்பதை இன்னும் மிகப்பெரிய பாக்கியமாக நினைக்கிறேன்", என்று கூறினார்.



**ஆழியார் அறிவு திருக்கோயில் CEO P.முருகானந்தம்:**

மனவளக்கலை 60, 70 வருடங்களாக இருந்து கொண்டே இருக்கிறது. இதை திரைப்படம் மூலமாக கொண்டு சேர்க்க வேண்டும் என்று நினைத்தோம். அது இப்பொழுதுதான் நிறைவேறி இருக்கிறது. ஆன்மீகம் ஒரு பக்கம்; சினிமா வேறு பக்கம்; இந்த இரண்டும் ஒரு புள்ளியில் இந்த விழாவில் எப்படி இணையும் என்ற பதட்டம் எனக்குள் இருந்து கொண்டே இருந்தது. இங்கு பேசிய அனைத்து இயக்குநர் பெருமக்களும் தங்களது அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். அவர்கள் பேசியது மனவளக்கலை ஆசிரியர்கள் பேசியதற்கு ஒப்பாக இருந்தது. ஒரு 25 ஆண்டு காலம் நாம் முன்னோக்கி நகர்ந்து விட்டதாக நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்.



**நடிகர் ஜீவா தங்கவேல்:**

"2003ல் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷியிடம் நேரடியாக பிரம்ம ஞானம் பயிற்சி எடுத்துக்கொண்டேன். அப்படி ஒரு பாக்கியம் எனக்கு கிடைத்தது. அதை இப்போதுதான் முதல் தடவையாக ஒரு மேடையில் சொல்கிறேன். அதற்கான சரியான மேடை இதுதான் என்று நினைக்கிறேன். திரையுலகில் இருக்கும் பல மேதைகளும் இதை பின்பற்றுகிறார்கள் என்பதை இந்த மேடையில் பார்க்கும் போது தான் தெரிகிறது.

இந்த படத்தில் சொல்லி இருக்கும் விஷயங்களை போல, எப்படி வேதாத்திரி மகரிஷியை, அவரது கொள்கைகளை பின்பற்ற ஆரம்பித்தோம் என்றும் தங்களது வாழ்க்கை மாறியது என்பதையும் எல்லோரும் தங்களது அனுபவங்களாக கூறினார்கள். எனக்குள்ளே இந்த தியானம் பண்ண வேண்டும் என்கிற ஆர்வத்தை தூண்டியதே சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் தான். பாபா படம் ரிலீஸ் ஆன சமயம் அவர் பாபாவை தேடி செல்வார். இந்த சமயத்தில் தான் நானும் தியானத்தை விரும்ப ஆரம்பித்தேன். எல்லோரும் ஒருமுறை ஆழியாறு சென்று அந்த மணவளக்கலை பயிற்சியை எடுத்துக் கொண்டால் உங்கள் வாழ்க்கையிலும் நிச்சயம் மாற்றங்கள் ஏற்படும்" என்று கூறினார்.



**விழாவில் நன்றியுரை ஆற்றிய இயக்குநர் ஆர்.சுப்ரமணிய பாரதி பேசியதாவது:**

நான் மனவளக்கலை பயிற்சி எடுத்துக் கொண்டதால் இதனை உணர்வுபூர்வமாக இயக்கும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. இந்த படத்தை இயக்க வாய்ப்பளித்த எல்லாமுமாகவும், எங்கும் நிறைந்திருக்கின்ற மகரிஷி ஐயாவுக்கும், உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் பத்மஸ்ரீ திரு எஸ்.கே.எம் மயிலானந்தன் அவர்களுக்கும், அறங்காவலர்கள் அனைவருக்கும், இந்த படத்தை இயக்குவதற்கு உறுதுணையாக இருந்த CEO P.முருகானந்தம் ஐயா அவர்களுக்கும், ஒருங்கிணைப்பில் உதவிய அண்ணன் குரு அரங்கதுரை அவர்களுக்கும், மற்றும் ஆழியார் அறிவித்திருக்கோவில் சார்ந்த ஆசிரியர்கள், அன்பர்கள் அனைவருக்கும் நன்றி.

இந்த படத்தை சிறப்பாக உருவாக்க நடித்துக் கொடுத்த அனைத்து நடிகர்களுக்கும், தொழில்நுட்ப கலைஞர்களுக்கும், எனது இயக்குநர் குழுவினர்களுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். இந்த விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் நன்றி.

இந்த விழாவின் முடிவில் தமிழ்நாடு திரைப்பட இயக்குநர்கள் சங்கத்தின் சார்பாக தலைவர் ஆர்.வி. உதயகுமார்அவர்களின் முன்னிலையில் மூத்த இயக்குநர் எஸ்.பி. முத்துராமன் அவர்கள் படத்தின் இயக்குநர் ஆர். சுப்ரமணிய பாரதிக்கு பொன்னாடை போர்த்தி சிறப்பு செய்தனர். உடன் சங்கத்தின் நிர்வாகிகள் என். ஏகாம்பவாணன். ஏ.கே.நம்பிராஜன், தி.ரமேஷ் பிரபாகரன் மற்றும் எழுத்தாளர், இயக்குநர் டி.கே. சண்முகசுந்தரம் உள்ளிட்ட பலர் இருந்தனர்.

இந்த விழாவில் திரை உலகினை சார்ந்த பலரும் கலந்து கொண்டனர். இந்த விழாவை சிறப்பாக பேராசிரியை அருள்நிதி மாலதி அவர்கள் தொகுத்து வழங்கினார். இசைக்கவிஞர் சௌந்தர்யன், நடிகர் பரோட்டா முருகேசன், நடிகர் விட்டல் ராவ், நடிகை ஸ்ரீபிரியா, நியூஸ் 7 கரு.ராதாகிருஷ்ணன், மேனேஜர் கல்யாணம், பி.ஆர்.ஓ. ஜான்சன், பழனி குருகுல சபா ஞானசக்திவேல், எஸ்.ஆர்.ரமணன், தொழிலதிபர் SEAOL ஆனந்தன், மூத்த பத்திரிகையாளர் பொன்சி, எழுத்தாளர் பாலமுரளி வர்மன், இயக்குநர்கள் நந்தன், ரவிமுருகையா, பிதா கார்த்திக்குமார் மற்றும் இந்த படத்தின் ஒளிப்பதிவாளர் கே.கோகுல், எடிட்டர் A.R.சிவராஜ், சிறப்பு சப்தம் ஏ.கஜபதி, டிசைனர் என்.வி.அகிலன், படத்தின் இணை இயக்குநர் ராமு.மா.சே., துணை இயக்குநர்கள் தங்க மித்திரன், மூர்த்தி நடராஜன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# AI -ல் சினிமா

பழைய ஜுன்ஸ் அணிந்த ஒரு திரைப்படக் குழு, ஜுர வேகத்தில் என்னை சந்தித்தார்கள். துவைக்காத ஜுன்ஸ் என்றாலும் வெண்ணிற டாப்ஸ், உச்சியில் ஹேர்கிளிப், பட்டாம்பூச்சி மூக்குத்தியுடன் இருந்த அவள் என்னை வசீகரித்தாள். பார்வதியின் ஜாடையில் என்னை ஈர்த்த அவளின் பெயர் கேட்கவில்லை. இணை இயக்குநராம். ஆங்கிலம் தெரியும் என்பதால் அவளை முதன்மைப்படுத்தி என்னுடன் பேச அனுமதித்தார் இயக்குநர். என்னுடன் தமிழிலேயே உரையாடலாம் எனத் தெரிந்ததும் பட்டாம்பூச்சி மூக்குத்தியை பின்னுக்குத் தள்ளிவிட்டு இயக்குநரே பேசினா(ன்)ர்.

ஏ.ஐ உதவியுடன் இம்மாதம் படம் எடுத்து, அடுத்த மாதம் படத்தை ரிலீஸ் செய்ய வேண்டும் என்றார். நான் எழுதிய கட்டுரைகள்தான் அவர்களுக்கு ஊக்கம் தந்ததாகவும், கன்னிமாரா நூலகத்தில் நான் உரையாற்றியபோது நேரில் வந்து என்னுடன் கைகுலுக்கிய தாகவும் எல்லோரும் கோரஸாகச் சொன்னார் கள். நான் அந்தப் பெண்ணையே கவனித்துக் 'கொண்டிருந்தேன். ஒருவேளை அவள் பார்வதிதானா?

எவ்வளவு சார் செலவாகும்? பத்து லட்சத்துல முடிச்சுடலாமா என்றது, போனி டெயில் வைத்திருந்த ஒரு அழுக்கு ஜுன்ஸ். நான் "கதை இருக்கா?" என்றேன்.

லைன் இருக்கு ஐயா, ஸ்க்ரீன் ப்ளேவும் ஏ.ஐ.யில்தான் எழுதணும், அந்த ஐயா, அவர்களுடன் ஒட்டாமல் வேட்டியில் இருந்ததை அப்போதுதான் கவனித்தேன். பதினைந்து வருஷம் எக்ஸ் பீரியன்ஸ்ங்க என்று அவர் முந்தைய வாரம் ஃபோனில் பேசியது ஞாபகம் வந்தது.

"உலகிலேயே முதல் முறையாக ஏ.ஐ சினிமா என தந்தியில் விளம்பரம்" "பிபிசியில இன்டர்வியூ எடுப்பான்ல" "பிரஸ் மீட்லயே இன்டஸ்ட்ரியை மெரட்டணும்."

வாரம் ஒரு முறை, இவர்களைப் போன்ற ஏ.ஐ படத்தயாரிப்பு படக் குழுவை சந்திக்கிறேன். யாரும் எதையும் கற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. பத்து லட்சம் இருந்தால் காலையில் படம் ரெடி, ஆஸ்கார் அவார்டு என் ஏதேதோ பேசுகிறார்கள். அந்த மூக்குத்திப் பெண் மட்டும் விதிவிலக்கு. "சார், ஏதாவது ஏ.ஐ வொர்க்ஷாப் நடத்தினால் சொல்லுங் கள். கற்றுக் கொள்ள வேண்டும்" எனக் கேட்டுச் சென்றாள்.

### கூகுள் வியோ கலக்கல்!

கூகுள் வியோ (3) வந்தபின் இன்ஸ்டா ரீல்ஸ் எல்லாம் ஏ.ஐ. ரீல்ஸாக மாறிவிட்டது. பெரும்பாலும் 18 பிளஸ் அபத்தங்கள். கூகுளுக்கு மாதம் 1950 ரூபாய் கட்டினால் தானே டப்பிங் செய்து தானே வீடியோ தயாரித்து தருகிறது வியோ 3. இந்தத் தொகை மிடில் கிளாசுக்கு அதிகம். மாதாந்திர பட்ஜெட் இடிக்கும். ஆனால் புத்திசாலி மிடில் கிளாஸ் மாதவன்கள் ஒரு தந்திரம் பயன்படுத்தி இலவசமாகவே வீடியோ தயாரிக்கிறார் கள். வியோ 3, (தற்போது) முதல் மாதம் மட்டும் இலவசம். மாதவன்கள் முதல் மாதம் முடிவதற்கு முன், சப்ஸ்க்ரிப்ஷனை துண்டித்து விட்டு, பணம் கட்டாமலேயே விளையாடுகிறார்கள். பிறகு வேறு ஒரு ஐடி வழியாக மீண்டும் அதே டெக்னிக்கில் இலவச வீடியோ. கூகுள் இதனை என்றைக்கு இதை கண்டு பிடிக்கிறதோ, அன்றோடு முதல்மாதம் இலவசம் என்கிற திட்டம் முடிவுக்கு வந்துவிடும். எனவே முந்துங்கள், வியோ 3 பயன்படுத்தி, பிரேக்கப் ஆவதற்கு முன் உங்கள் க்ரஷ்ஷுடன் ஏ.ஐ கனவுக்காட்சியில் டான்ஸ் ஆடுங்கள். பாடலுக்கு முதல் வரி தருகிறேன். மூக்குத்திப் பட்டாம் பூச்சியே, நீ என்னை சாச்சிப்புட்டியே!

### ஆளை மயக்கும் ஏ.ஐ. வயலின்

ஏ.ஐ இசை ஆர்வலர்கள் *Acestudio.ai* என்பதை தெரிந்து வைத்துக் கொள்ளுங்கள். பல முறை கூறியிருக்கி றேன், *Amper, Mubert, Suno, Beetovan, Udio, Soundraw* போன்றவை ஓரிரு கிளிக்கில் தானே பாடலை உருவாக்கித் தந்துவிடும். ஆனால் ஏஸ் ஸ்டுடியோ கொஞ்சம் வித்தியாசமானது. நாமே வயலின் வாசிக்கும் அனுபவத்தை தரக்கூடியது. முதல் பார்வைக்கு வழக்கமான சவுண்ட் ரெக்கார்டிங் மென்பொருள் போலத்தான் இருக்கிறது.

முதலில் அதனைத் திறந்து ஒரு காலி *Instrument Track*ஐ உருவாக்குங்கள்.

அடுத்து *MIDI* (அ) *MusicXML* ஃபைலை அந்த டிராக்கில் ஏற்றுங்கள். அல்லது அதில் உங்கள் மியூசிக் நோட்ஸை எழுதுங்கள். பிறகு *Instrument* பெட்டியில் வயலினை தேர்ந்தெடுங்கள். அவ்வளவுதான் வயலின் ஸோலோ ரெடி.

இதே ஏஸ் ஸ்டுடியோவில், குரல்களையும் உருவாக்கலாம், ஆண், பெண் குரல்களை மாற்றலாம், உங்கள் குரலையும் பிரதி எடுத்து பாட வைக்கலாம். பாடல்களை *Vocal, Strings, Drums* என தனித்தனி டிராக்குளாகப் பிரிக்கலாம். முயற்சி செய்து பாருங்கள்.

### ஓடும் காரில் உருவான டுடோரியல்

இந்த ஜனவரியிலிருந்து நான் டிரைவர் சீட்டில் அமர்வதில்லை. மருத்துவர் ஆலோசனையின்படி டாக்ஸி பயணம். இது டாக்டர் செலவை விட அதிகமாக இருக்கிறது. டைடல்பார்க் நோக்கி தவழும் டாக்ஸி, ராமாவரத்தில் நொண்டும். தட்டுத் தடுமாறி கிண்டி மேம்பாலச் சரிவில் இறங்கும்போது, சற்று வேகமாக இறங்கி, மேலும் வேகமாக சின்ன மலையைத் தொட்டதும், இடது வலது புரியாமல் ஒதுங்கி, அண்ணா பல்கலை வாசல் தொட்டுவிட்டு, விம்பிள்டன் வீரர்கள் வென்றவுடன் புல்தரையில் மல்லாந்து படுத்துக்கொள்வது போல, நின்றுவிடும். ஒரு திங்கட்கிழமையில் இதே போல டாக்ஸி நகராமல் நின்று கொண்டிருந்தபோது, துபாய் மச்சானின் ஞாபகம் வந்தது. அடோப் பிரிமியரில் ஏ.ஐ. வசதி இருக்கிறதாமே, அதற்கு டுடோரியல் இருக்கிறதா என அவர் கேட்டிருந்தார். யுடியூபில் இருந்தவற்றை அனுப்பி வைத்தேன். அவருக்குப் பிடிக்கவில்லை. எனவே நானே உருவாக்கித் தருவதாகக் கூறியிருந்தேன். நகர இடமில்லாமல் மல்லாந்திருந்த டாக்சிக்குள் லேப்டாப்பை திறந்தேன்.

முதலில் அடோப் பிரிமியரை அழைத்தேன். அடுத்து கூகுள் ஏ.ஐ ஸ்டுடியோவை இயக்கினேன். அதில் *Stream Realtime* என்றொரு மெனுவை கிளிக் செய்தேன். அந்த மெனு வழியாக நமது காமிரா காட்சி அல்லது லாப்டாப் ஸ்க்ரீனை ஒரு வீடியோவாக ரெக்கார்ட் செய்ய முடியும். நான் *Video Source*ல் *Screen* என்பதைத் தேர்ந்தெடுத்தேன். அடுத்து *Entire Screen* என்பதை கிளிக் செய்தேன்.

பிறகு கீழே உள்ள *Prompt Box*ல் அடோப் பிரிமியரில் என்ன நடக்க வேண்டும் என்பதை கட்டளையாகக் கொடுத்தேன். ஏ.ஐ ஸ்டுடியோ நாம் சொல்வதை வீடியோவாக பதிவு செய்து கொண்டே வந்தது. ஆறு நிமிடங்கள் கழித்து மீண்டும் டாக்சி புறப்படும்போது அடோப் பிரிமியர் வீடியோ டுடோரியல் ரெடி.

### கற்பனையை பாலிஷ் செய்யும் ஏ.ஐ.

ஒரு காலத்தில் ஓவியர் ஜெயராஜ் வரையும் மேல்பட்டன் போடாத

> பக்கம் 8ல் தொடரும்



தென்னிந்திய திரைப்படம், T.V. & டிஜிட்டல் தயாரிப்பு நிர்வாகிகள் சங்கத்தின் 2025, 2028 ஆம் ஆண்டுக்கான தேர்தல் 8.6.25 அன்று நடைபெற்றது. அதில் புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் 14:6.25 அன்று பதிவியேற்றனர். தலைவர் P.ராஜேந்திரன், செயலாளர் B.N.சுவாமிநாதன், பொருளாளர் S.M.ராஜ்குமார், துணைத்தலைவர் R.செல்லதுரை, S.P.சொக்கலிங்கம் துணைசெயலாளர்கள் D.ரமேஷ்குமார், S.ஹக்கிம், P.ராஜ்குமார், செயற்குழு உறுப்பினர்கள் U.சங்கர், N.பிரதாப், P.கோவிந்தராஜ், M.S.லோகநாதன், R.சிவகுமார், N.மகேந்திரன், M.அம்பிகாபதி, A.குமரவேல், M.செந்தில்குமார், P.ஆறுமுகம், S.சுரேஷ்.





21.06.2025 சர்வதேச யோகா தினம் அன்று ஆழியாறு அறிவுத் திருக்கோயிலில் ஆனந்த வாழ்க்கை திரைப்பட வெளியீட்டு விழாவில் இயக்குநர் ஆர்.சுப்ரமணிய பாரதியையும், ஒருங்கிணைப்பாளர், உதவி இயக்குநர், நடிகர் குரு அரங்கதுரையையும் கௌரவித்தபோது. படத்தில் அறங்காவலர்கள் திரு. *M*.சின்னசாமி, திரு. *S.V.*பாலசுப்பிரமணியம், நீதிபதி திரு. *D*.பாலு, செல்வா கோல்டு கவரிங் திரு. செல்வராஜ், திரு. *V*.ஆறுச்சாமி, திரு. *P*.முருகானந்தம் *CEO* ஆகியோர்.

பக்கம் 7 தொடர்ச்சி

பெண்களை பார்ப்பதற்காகவே குமுதம், விகடன் வாங்குவேன். இப்போது ஜெவைவிட கவர்ச்சியாக *Midjourney*, *Flux*, *DallE* போன்ற ஏ.ஐகள் படங்கள் வரைகின்றன. ஜெவைப் போல யாருமே படம் வரையவே முடியாது என்கிற என் எண்ணம் மாறிவிட்டது. செய்யறிவு அந்த எண்ணத்தை மாற்றிவிட்டது. நீங்களும், நானும் இரசிகர்கள். நமது கருத்து இது. ஓவியர்கள் இதைப்பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று (ஃபேஸ்புக்) தோழியிடம் கேட்டேன். அவர் ஒரு ஓவியர். ஏ.ஐ ஓவியங்கள் முதலில் தன்னை பயமுறுத்தியது. ஆனால் அதன் வேகமும், வெரைட்டி யும் எனக்குப் பிடித்திருக்கிறது. சில நேரம் ஏ.ஐ படங்கள் தரும் தாக்கங்களிலிருந்து நான் எனது ஓவியத்தை உருவாக்குகிறேன் என்றார். என்னைப் பொறுத்தவரை ஏ.ஐ. சினிமாவும் இந்த நிலையில்தான் இருக்கிறது. அது இன்னும் முழுமை அடையவில்லை. ஆனால் ஒரு இயக்குநர் அல்லது காமிராமேனின் கற்பனைகளை மேலும் செரிவாக்க உதவுகிறது.

**-ஐ.எஸ்.ஆர்.செல்வகுமார்**




Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**